# Tamil Nadu Bishops' Council (TNBC)
## Tamil Nadu Latin Bishops' Council (TNLBC)

TNLBC Secretariat | 22/45, Santhome High Road | Chennai - 600 004 | Tamil Nadu | India
T : 044-24611949 | P : 97512 08059 | E : tnbctnlbc@gmail.com | Web : www.tnbc.in


### வாக்காளர் பட்டியல் சிறப்புத் தீவிர திருத்தம்!
### தமிழக ஆயர் பேரவைச் சுற்றுமடல்!

இயேசுவில் அன்புக்குரியவர்களே!
இறைவனின் அருளும் கடவுளின் அன்பும் உங்களோடு இருப்பதாக!

**குடியுரிமை கடவுளின் கொடை!**

கிறித்தவர்கள் நாம், இம்மண்ணின் மைந்தர்கள்; உரிமைக் குடிமக்கள்! நாம் அகதிகளாய், ஏதிலிகளாய் இங்கு வாழவில்லை. குடியுரிமை என்பது அரசு அளிக்கும் கொடை அல்ல. அது நம் பிறப்புரிமை. கடவுளின் கொடை. வாக்குரிமை என்பதும் குடியுரிமையோடு தொடர்புடையதே. எனவே, நாம் ஒவ்வொருவரும் நம் வாக்குரிமையை உறுதி செய்யக் கடமைப்பட்டுள்ளோம். இல்லையெனில் நாம் இம்மண்ணில், இரண்டாந்தரக் குடிமக்களாய்க் கருதப்படும் அவலம் ஏற்படலாம். அந்நிலையை நாம் தவிர்க்க வேண்டும். ஒரு தனிநபராக மட்டுமல்ல, ஒரு சமூகமாகவும் சனநாயக அமைப்பில் அடையாளப்படுவதற்கு நம் மக்களின் வாக்குரிமை அடிப்படையான ஒன்றாகும். வலிமையான வாக்குவங்கியே நம் சமூக உரிமைகளையும் உறுதி செய்ய உதவும்.

இரண்டாம் வத்திக்கான் சங்கம் "குடிமக்களின் வாக்குரிமையே சமூகத்தின் பொதுநன்மையை நிலைநாட்டும் அடிப்படை உரிமையாகவும், கடமையாகவும் உள்ளது" என்று போதிக்கிறது (இ.உ.தி.75). அன்னை மரியாளும், புனித யோசேப்பும் தம் குடிக்கணக்கைப் பதிவு செய்ய பெத்லேகம் சென்றபோதே, நம் மீட்பர் இயேசு இம்மண்ணில் பிறந்தார் (லூக் 2:4-5). எனவே அவர் தம் அடிச்சுவட்டைப் பின்பற்றும் நமக்கு, குடிக்கணக்கும் வாக்குரிமையும் புதியவை அல்ல. கடவுளுக்குரியதைக் கடவுளுக்கும், சீசருக்குரியதைச் சீசருக்கும் நாம் செலுத்தப் பழகியவர்கள் (லூக். 20:25). அதன் வழியில் தற்போதைய சிறப்புத் தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தத்தையும் நாம் எதிர்கொள்கிறோம்.

**வாக்காளர் பட்டியல் சிறப்புத் தீவிரத் திருத்தம்!**

தற்போது "சிறப்புத் தீவிரத் திருத்தம்" (Special Intensive Revision) என்ற பெயரில் தமிழகத்தில் வாக்காளர் பட்டியல் மீளாய்வு செய்யப்படுகிறது. 2025 நவம்பர் - 4 முதல் டிசம்பர் - 4 வரை, கணக்கீட்டுப் படிவம் சமர்பிக்க கால வரம்பு தரப்பட்டுள்ளது. அதன்பின் டிசம்பர் - 9 அன்று வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும் (Draft Electoral Roll).




PRESIDENT
Most Rev. Dr. George Antonysamy
Archbishop of Madras-Mylapore
Archbishop's House, No. 41,
Santhome High Road, Chennai - 600 004
Tel : 044 2461102, 24640833
Email : abpmmsec@gmail.com

VICE PRESIDENT
Most Rev. Dr. Lawrence Pius
Bishop of Dharmapuri
Bishop's House, Post Box 32,
Gundalapatty Medu, Dharmapuri- 636701,
Ph : 04342-2288409
Email : dharmapuridiocese@gmail.com

SECRETARY
Most Rev. Dr. Nazarene Soosai
Bishop of Kottar
Bishop's House, P.B. No. 17, Nagercoil
Kanyakumar Dt.- 629 001.
Tel : 04652-278343, 279152
Email : kottardiocese@yahoo.co.in

TREASURER
Most Rev. Dr. S. Antonysamy
Bishop of Palayamkottai
Catholic Bishop's House,
Post Box 108, Palayamkottai,
Tirunelveli - 627011,
Tel : 0462-2522114,
Email : palayamkottaidiocese.org

அதில் விடுபட்ட நபர்களுக்கு ஆட்சேபனை தெரிவிக்கக் கால வரம்பு சனவரி - 8 வரை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அவையனைத்தையும் சரிபார்த்த பின் பிப்ரவரி - 7 ஆம் நாள் இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும் (Final Electoral Roll) எனத் தெரிகிறது. இவை அனைத்திலும் துணைபுரிய அரசியல் கட்சிகள் சார்பில் வாக்குச்சாவடி முகவர்களும் (Booth Level Agents), அரசு சார்பில் வாக்குச்சாவடி அலுவலர்களும் (Booth Level Officers) நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்தம் துணையுடன் நாம் ஒவ்வொருவரும் துரிதமாகவும் நுட்பமாகவும் செயல்பட வேண்டிய தேவையுள்ளது.

**நம் அவசரக் கடமைகள்!**

தற்போதைய சிறப்புத் தீவிர திருத்தச் செயல்பாடுகள் மிகக் குறுகிய காலத்தில் நடைபெறுகின்றன. எனவே, அவசரக் கோலத்தில் நடைபெறும் அச்செயற்பாடுகளால், நம்மில் எவரும் தம் உரிமையை இழந்துவிடக் கூடாது. அதுவே நம் கரிசனை. கணக்கீட்டு படிவத்திலும் (Enumeration Form), உறுதிமொழிப் படிவத்திலும் (Declaration Forms), சேர்க்கைப் படிவத்திலும் (Form VI), பிழைதீர்க்கும் படிவத்திலும் (Form VIII) துல்லியமான தரவுகள் வேண்டப்படுகின்றன. நேரடியாகவும், இணைய வழியாகவும் இத்தரவுகள் சேர்க்கப்படுகின்றன. அவற்றில் சிறுபிழை நேர்ந்தாலும் நமக்குப் பேரிழப்பு நேரிடும். நம்மில் இவை பற்றிய செயல்நுட்பம் கொண்டவர்கள், பிறருக்கு உதவக் கடமைப்பட்டவர்கள். ஏற்கனவே இவ்வழியில் செயல்படும் மறைமாவட்டங்களின் அனுபவத்தில் நாம் பாடம் கற்க இயலும்.

நம் பங்குகளில் வாழ்பவர்கள், வெளியூர்களில், வெளிநாடுகளில் வசிப்பவர்கள், தொழில், படிப்பு இவற்றால் இடம் பெயர்ந்தவர்கள் ஆகிய அனைவரின் பெயர்களையும், வாக்காளர் பட்டியலில் இடம் பெறச் செய்வதற்கு இக்குழுவினர் செயல்பட வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். அத்துடன் 18 வயதிற்கு மேற்பட்ட புதிய வாக்காளர் அனைவரையும் உண்னிப்பாகக் கண்டறிந்து அவர்களைப் பட்டியலில் தவறாமல் சேர்க்க உரியவற்றைச் செய்ய வேண்டுகிறேன்.

**வாக்குரிமையில் பிழைகளும் திருத்தங்களும்!**

எதிர்வரும் டிசம்பர், 9, 2025 அன்று வெளியிடப்படும் வரைவு வாக்காளர் பட்டியலில் நம்மவர்கள் பெயர் ஏதும் விடுபட்டால், நம் தரப்பில் உரிய ஆட்சேபனைகளை உரிய காலத்தில் எழுப்பவும் (Claims & Objections), அவற்றை உரிய ஆவணங்களுடன் நிறைவு செய்யவும் வேண்டுகிறேன். பிப்ரவரி 7, 2026 அன்று, இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்படுகிறது. பட்டியலைச் சரிபார்த்தபின், மேலும் எவராவது விடுபட்டால், 15 நாட்களுக்குள் *முதல் மேல்முறையீட்டை மாவட்ட அளவில்* மேற்கொள்ளக் கடமைப்பட்டுள்ளோம். அந்நிலையிலும் சரியான தீர்வு இல்லையெனில், *30 நாட்களுக்குள் இரண்டாவது மேல் முறையீடு மாநில தேர்தல் ஆணையத்தின்* முன்பு மேற்கொள்ள வேண்டும். அந்தந்த நிலையில் உரிய ஒத்துழைப்பைப் பெற்று, தொடர்ந்து நம் சமூகத்தின் உரிமைகளை நிலைநாட்ட அனைவரையும் அன்புடன் வேண்டுகிறேன்.

நாம் பரிந்துரைக்கும் வழிமுறைகள்:

- கிறித்தவர் வாழ்வுரிமை இயக்கம், மறைமாவட்டத் துறவியர் பேரவை, இளையோர் பணிக்குழு, பெண்கள் பணிக்குழு, பொதுநிலையினர் பணிக்குழு, அன்பியங்கள் ஊடாக மறைமாவட்டக் குழுவினர் இப்பணிகளை முன்னெடுப்பது சிறப்பாகும். அதற்கான ஒருங்கிணைப்புக் குழுவினை மறைமாவட்டங்கள் அமைத்திட வேண்டும். அக்குழுவின் அமர்வினை உடனடியாக ஆயரின் மேற்பார்வையில் கூட்டுவது சிறப்பு.

- அதே அமைப்பினர் மாநில அளவிலும் இணைந்து செயல்படுவர். கிறித்தவர் வாழ்வுரிமை இயக்கம் அதனை ஒருங்கிணைக்கும். இவை தொடர்பான தகவல்களை மாநிலக் குழு மறைமாவட்டக் குழுக்களோடு அவ்வப்போது பகிர்ந்து கொள்ளும்.

- ஒவ்வொரு மறைமாவட்டத்திற்கும் வாக்காளர் பட்டியல் சிறப்புத் திருத்தப் பணிகளுக்கு உதவும் வகையில், மறைமாவட்டக் குழுவின் முயற்சியில் ஒரு Whatsapp குழுவையும், ஒரு பிரத்யேகமான மின் அஞ்சல் (e-mail) தொடர்பையும் உருவாக்குவது இப்பணிகளை ஒருங்கிணைக்க உதவும்.

- இது குறித்த பிரச்சினைகளை உடனுக்குடன் உரியவர்களுடன் பகிர்ந்து கொண்டால் அவற்றைத் தீர்க்க, வழி பிறக்கும்.

- இத்துடன் சமயச்சார்பற்ற அரசியல் கட்சி முகவர்கள், நம் சமூகத்தின் கணினி வல்லுநர்கள், சட்டத்துறைப் பணியாளர்கள் அனைவரையும் தோழமையுடன் அணுகி மறைமாவட்டங்கள் இவற்றில் செயல்பட வேண்டுகிறேன்.

- மாநில அளவிலான இரண்டாவது மேல்முறையீட்டை மேற்கொள்ள தமிழக ஆயர் பேரவைச் சட்டப்பிரிவு உதவ இயலும். ஆனால் மறைமாவட்டங்களில் அவற்றை ஒருங்கிணைப்பது அவசியம்.

மேற்கண்ட பரிந்துரைகளை, அந்தந்த மறைமாவட்டங்கள், தம் சூழலுக்கேற்பத் திட்டமிட்டு, செயல்பட வேண்டுமென அனைவரையும் அன்புடன் வேண்டுகிறேன். நம் சமூகத்தின் உறுப்பினர் எவரும் வாக்காளர் பட்டியலில் விடுபடக்கூடாது என்பதை ஒவ்வொரு மறைமாவட்டமும் உறுதி செய்வோம். வரலாற்றின் இறைவன் ஒவ்வொரு காலகட்டத்திலும் நம்மை வழிநடத்துகிறார். அதனை உணர்ந்து நாம் அவர் தம் அடிச்சுவட்டில் நம் உரிமைகளை உறுதி செய்வோம். இறைவன் நம்மையும் நம் குடும்பங்களையும் ஆசிர்வதிப்பாராக!

+ George Antonisamy

23.11.2025
கிறிஸ்து அரசர் பெருவிழா

*பேராயர் முனைவர் ஜார்ஜ் அந்தோணிசாமி*
தலைவர், தமிழக ஆயர் பேரவை